Wondershare PDFelement

**அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு வரையறுக்கப்பட்டது, சென்னை –2**

1. இந்த பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம் துணைமேலாளர் (கொள்முதல்) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு வரையறுக்கப்பட்டது, பல்லவன் சாலை, சென்னை –2 அவர்களுக்கு 12/07/2022 அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் கிடைத்திடுமாறு, அனுப்பப்படுதல் வேண்டும். அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் எந்த நிலையிலும் தபால் காலதாமதத்திற்கு பொறுப்பேற்காது. இந்த ஒப்பந்தப்புள்ளியின் விண்ணப்பப்படிவங்கள், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் அவர்களின் அலுவலகத்தில் 14/07/2022 அன்று பிற்பகல் 3.30 மணி அளவில் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும் (விண்ணப்பித்த ஒப்பந்ததாரர் சார்பில் ஒரு நபர் மட்டுமே, ஒப்பந்தாரர் விண்ணப்பபடிவம் வாங்கியதற்கான ரசீதுடன் வருதல் வேண்டும்). எதேனும் தவிர்க்க முடியாத காரணங்கள் ஏற்பட்டு, மேற்குறிப்பிட்ட தேதியில் ஒப்பந்தபுள்ளி திறக்க முடியாத நிலை ஏற்படின் அதனை அடுத்து வரும் வேலை நாளில் திறக்கப்படும்.

2. ஒவ்வொரு பணிமனைக்கும் தனி தனியாக விண்ணப்பம் அனுப்ப வேண்டும். ஒரே விண்ணப்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பணிமனைக்கு விண்ணப்பித்தால் செல்லுபடி ஆகாது.

3. Online (நிகழ்நிலை) மூலம் விண்ணப்ப படிவம் பதிவிறக்கம் செய்யப்பட்டு விண்ணப்பிக்கும் பட்சத்தில் ஒரு விண்ணப்பத்தின் விலையான ரூபாய் 1,000/–க்கு (Demand Draft in the Name of “S.E.T.C.TN Ltd,” payable at Chennai from any Nationalised Bank) எடுத்து Technical bid –யில் இணைக்க வேண்டும்.

4. பிணைத்தொகை (EMD) ரூபாய் 5,000/–க்கு (Demand Draft in the Name of “S.E.T.C, TN Ltd,” payable at Chennai from any Nationalised Bank) எடுத்து Technical bid –யில் இணைக்க வேண்டும்.

5. விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பணிமனைக்கும் பிணைத்தொகை (EMD) ரூபாய் 5,000/– மற்றும் Online (நிகழ்நிலை) மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்படிவத்தின் விலை ரூபாய் 1,000/– க்கான Demand Draft இணைக்கப்பட வேண்டும். இணைக்கப்படாத விண்ணப்படிவம் செல்லுபடி ஆகாது.

6. விண்ணப்பவங்களை டெக்னிகல் பிட் மற்றும் கமர்சியல் பிட், தனித்தனி கவர்களில் வைத்து இரண்டையும் சேர்த்து ஒரே கவரில் அனுப்ப வேண்டும். கவர் மற்றும் விண்ணப்பபடிவங்களில் எந்த பணிமனைக்கு விண்ணப்பிக்கப்பட்டது என்று எழுத வேண்டும்.

    a. Technical bid–யில் முகவரி சான்று, போட்டோ ஒட்டிய அடையாள அட்டைநகல், EMD வரைவோலை, ரூபாய் 5,000/– Online (நிகழ்நிலை) மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பபடிவத்தின் விலை ரூபாய் 1,000/– க்கான வரைவோலை, உறுதிமொழி படிவம் மற்றும் கையெழுத்திட்ட ஒப்பந்த புள்ளி விதிமுறைகள் வைக்க வேண்டும்.

    b. Commercial bid–யில் கூலிதொகை(Rate) மட்டும் குறிப்பிட வேண்டும்.

7. குறிப்பிட்ட கால அளவுக்குள் வரும் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விண்ணப்ப படிவங்கள் மட்டும் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும். அதற்கு பின்பு காலதாமதமாக வரும் விண்ணப்பபடிவங்கள் கண்டிப்பாக பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

Wondershare PDFelement

Wondershare
PDFelement

**அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு வரையறுக்கப்பட்டது, சென்னை–2**

உறுதிமொழி படிவம்

.................................................................................................................

.................................................................................................................

ஒப்பந்ததாராகிய நான் / நாங்கள் கீழ்க்கண்ட உறுதி மொழிகளை என் / எங்களுடைய சுய சிந்தனையுடன் உறுதி அளிக்கிறேன் / அளிக்கிறோம்.

1. ஒப்பந்த காலத்தில் என்னால் / எங்களால் நியமிக்கப்பட்ட நபர்களால் எவ்வித சச்சரவுகள், பொருட் சேதம் ஏற்படாது, என்று உறுதி அளிக்கிறேன் / அளிக்கிறோம்.
2. என்னால் / எங்களால் நியமிக்கப்படும் நபர்களுக்கு சுகாதாரம், பாதுகாப்பு உபகரணங்கள், பின்னாளில் பணி நிரந்தரம் முதலிய எவ்விதமான கோரிக்கையினையும் நான் / நாங்கள் கோரமாட்டோம், என்று உறுதி அளிக்கிறேன் / அளிக்கிறோம்.
3. ஒப்பந்த காலத்தில் என்னால் / எங்களால் ஏற்படும் அனைத்து சேதாரங்களுக்கும் நிர்வாகம் நிர்ணயிக்கும் தொகையை நான் / நாங்கள் செலுத்திவிடுகிறேன் / செலுத்தி விடுகிறோம் என்று உறுதி அளிக்கிறேன் / அளிக்கிறோம்.
4. ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்ட தொகைக்கு அதிகமாக ஒப்பந்த காலம் வரை நான் / நாங்கள் கோரமாட்டோம் என்று உறுதி அளிக்கிறேன் / அளிக்கிறோம்.
5. ஒப்பந்தக் காலத்தில் என்னால் / எங்களால் நியமிக்கப்பட்ட நபருக்கு ஏதேனும் விபத்து நேரிடின் அதற்கு நானே / நாங்களே முழு பொறுப்பு மேலும் விபத்து தொடர்பாக வரக்கூடிய விபத்து இழப்பீடு போன்ற அனைத்திற்கும் நானே! நாங்களே பொறுப்பு எனவும் உறுதி அளிக்கிறேன் / அளிக்கிறோம்.

ஒப்பந்ததாரர் கையொப்பம் :

பெயர் :

முகவரி :

Wondershare PDFelement

Wondershare PDFelement

**அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு வரையறுக்கப்பட்டது, சென்னை–2**

**டெக்னிகல் பிட்**

**1.** ஒப்பந்ததாரரின் பெயர் :

**2.** ஒப்பந்ததாரரின் முகவரி :

**3.** GSTN ரிஜிஸ்டர் செய்யப்பட்ட நபர்/நிறுவனம் : Yes / No

GSTN Number : ----------------------------------------

**4.** GSTN ரிஜிஸ்டர் செய்யப்படாத நபர்/நிறுவனம் : Yes / No,

GSTN Number :

**5.** GSTN ரிஜிஸ்டர் Composite dealer

GSTN Number : ------------------------------------------

6. நிரந்தர கணக்கு எண்(PAN Number/ Tin No) :

(நகல் இணைக்கப்பட வேண்டும்)

7. போட்டோவுடன் அடையாள அட்டை :

மற்றும் முகவரிச்சான்று

(ஆதாரம் இணைக்கப்பட வேண்டும்)

Wondershare PDFelement

**8.** Online மூலம் விண்ணப்பம் பதிவிறக்கம்

செய்தால் அதற்குரிய விண்ணப்ப கட்டண விபரம் :

**9.** முன் வைப்பு தொகை (EMD) DD No :

(காசோலை இணைக்கப்பட வேண்டும்) Date :

Nationalized Bank Name :

**9.** கையெழுத்திட்ட ஒப்பந்த புள்ளி விதிமுறைகள்,

(இணைக்கப்பட வேண்டும்) :

திரு. ..............................................................த/பெ ………………………..………………

ஒப்பந்ததாராகிய நான் / நாங்கள் மேற்கண்ட விபரங்களை உண்மை என எண் / எங்களுடைய சுய சிந்தனையுடன் உறுதி அளிக்கிறேன் / அளிக்கிறோம்.

விண்ணப்பதாரர் கையொப்பம் :

பெயர் :

முகவரி :

Wondershare PDFelement

# ஒப்பந்தப்புள்ளி பற்றிய விதிமுறைகள்

1. ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக் கொள்ளவோ அல்லது எவ்வித காரணமின்றி நிராகரிக்கவோ மேலாண் இயக்குநர் அவர்களுக்கு முழு உரிமை உண்டு.

2. ஒப்பந்தகாலத்தில் நடைமுறையில் ஏற்படும் அனைத்து சர்ச்சைகளுக்கும் நிர்வாகத்தின் முடிவே இறுதியானதாகும்.

3. ஒப்பந்ததாரரால் குறிப்பிடப்பட்ட கூலியில் எவ்விதமான மாற்றத்தையும் பின்னால் ஏற்றுக்கொள்ள பட மாட்டாது. ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பபடிவங்களை பரிசீலனை செய்து ஒப்பந்தம் அமுல்படுத்திய பின் தேர்வு பெறாத விண்ணப்பதாரர்களுக்கு பிணை தொகை திருப்பி வழங்கப்படும்.

4. தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்தாரர் தங்களுக்கு வழங்கப்பட்ட மொத்த பணி ஆணை தொகையில் @ 2% காப்புத்தொகை செலுத்த வேண்டும்.இக் காப்புத்தொகை அவர்களின் ஒப்பந்த கால அனைத்து பணிகளும் திருப்திகரமாக முடிந்த பின் திருப்பி வழங்கப்படும் (ஒப்பந்த கால அளவு முடிந்த பின்).

5. ஒப்பந்ததாரரின் பணி நிர்வாகத்திற்க்கு திருப்த்திகரமாக இல்லை என்றாலோ அல்லது ஒப்பந்ததாரர் ஒப்பந்த விதி முறைகளுக்கு புறம்பாக நடந்தாலோ அல்லது ஏதேனும் தவறுகள் புரிந்தாலோ ஒப்பந்ததாரரின் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு காப்புத்தொகை பறிமுதல் செய்யப்படும்.

6. பிணை / காப்புத்தொகைக்கு எவ்விதமான வட்டியும் வழங்கப்பட மாட்டாது.

7. ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தின் படி ஆரம்பத்திலே செயல்படாமல் நின்று விட்டாலோ, அல்லது இடையில் நின்று விட்டாலோ, ஒப்பந்ததாரருக்கு காப்புத்தொகை திருப்பி தர படமாட்டாது.

8. ஒப்பந்ததாரரால் பணி செய்ய நியமனம் செய்யப்பட்ட நபர்களின் சுகாதாரதிற்கும் அவர்களின் உடைமைகளுக்கும் மேலும் இவர்கள் பணியின் போது ஏற்படும் விபத்துகளுக்கும் அதன் தொடர்பாக வரக்கூடிய விபத்து இழப்பீடு போன்ற அனைத்திற்கும் ஒப்பந்ததாரரே முழு பொறுப்பு, நிர்வாகம் பொறுப்பேற்காது.

9. ஒப்பந்ததாரரால் பணி செய்ய நியமனம் செய்யப்படும் நபர் ஏதேனும் கையாடல் செய்தாலோ நிர்வாகத்திற்கு சொந்தமான பொருட்களுக்கு சேதாரம் விளைவித்தாலோ, ஒப்பந்ததாரர் அதற்கான தொகையினை நிர்வாகம் நிர்ணயிக்கும் கால அளவுக்குள் செலுத்த வேண்டும். மேலும் ஒப்பந்ததாரரால் சுத்தம் செய்ய நியமிக்கப்படும், நபர் 18 வயதிற்கு மேற்பட்டவராய் இருத்தல் வேண்டும். கண்டிப்பாக இளம் சிறார்களை நியமனம் செய்யக்கூடாது.

10. ஒப்பந்ததாரர் (விண்ணப்பதாரர்) நியமனம் செய்யும் நபருக்கு காப்பீட்டு தொகையும் அவர் மேற்கொள்ளும் பணிக்கு தக்க பாதுகாப்பு உபகரணங்களும் ஒப்பந்ததாரர் வழங்க வேண்டும்.

11. ஒப்பந்ததாரரால் பணி செய்ய ஈடுபடுத்தப்படும் நபருக்கு சேர வேண்டிய கூலி, சுகாதாரம், காப்பீடு, வருங்கால வைப்பு நிதி ஆகியவைகளை ஒப்பந்ததாரரே செலுத்த வேண்டும். மேலும் மேற்படி பணியில் ஈடுபடுத்தப்பட்டவர்கள் மேற்கூறியவைகளை நிர்வாகத்திடம் எக்காரணம் கொண்டும் கோர முடியாது.

12. ஒப்பந்ததாரரால் பணி செய்ய ஈடுபடுத்தப்படும் நபர்களுக்கும் நிர்வாகத்திற்கும் எவ்விதமான தொழில் உறவுமுறை கிடையாது. சுத்தம் செய்யும் காலத்தில், அந்த நபர்களுக்கு ஏற்படும் சுகாதாரக்கேடு, காப்பீடு ஆகியவைகளுக்கு ஒப்பந்ததாரரே பொறுப்பாவார். அவைகளை ஒபந்ததாரரிடம் தான் கோர வேண்டும்.

Wondershare PDFelement

13. ஒப்பந்ததாரரால் பணி செய்ய ஈடுபடுத்தப்படும் நபர்கள் நிர்வாகத்திடம் தொழில் நிரந்தரம் மற்றும் கழக தொழிலாளர்களுக்கு வழங்கும் சலுகைகளுக்கு தகுதி அற்றவர்கள் ஆவார்கள். அதற்காக ஒப்பந்ததாரரால் ஈடுபடுத்தப்படும் நபர்களும் ஒப்பந்ததாரரும் எழுத்து மூலமாக உறுதி மொழி அளிக்க வேண்டும்.

14. ஒப்பந்தத்தின் கால அளவு இரண்டு ஆண்டுகள் ஆகும். புதுப்பித்தல் கிடையாது. புதிய ஒப்பந்தபுள்ளி கோரிய பின் தான் அடுத்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும்.

15. ஒப்பந்ததாரரால் ஈடுபடுத்தப்படும் நபர்கள் உள்ளேயும், வெளியேயும் செல்லும்போது, பாதுகாவலரால் பரிசோதிக்கப்படுவர். ஒப்பந்தம் முடிவடைந்தவுடன் ஒப்பந்ததாரர் நியமனம் செய்யும் நபர்களும் வெளியேறிட வேண்டும்.

16. ஒப்பந்ததாரரால் ஈடுபடுத்தப்படும் பணியாளர்ளுக்கோ, ஒப்பந்ததாரர்களுக்கோ, வருங்கால வைப்புநிதி மற்றும் காப்பீடு (ஜனதா இன்சுரன்ஸ்) மற்று சம்பந்தப்பட்ட இதர சட்ட பாதுகாப்பு அனைத்தும் ஒப்பந்ததாரர்களால் வழங்கப்பட வேண்டும். இது குறித்து நிர்வாகம் எந்த பொறுப்பும் ஏற்றுக் கொள்ள இயலாது.

17. ஒப்பந்ததாரர் இப்பணி குறித்து வழக்குகள் ஏது தொடர்வதாக இருந்தால் அவ்வழக்கு சென்னை நீதிமன்றங்களில் மட்டும் தொடர வேண்டும்.

18. ஒப்பந்ததாரர், ஒப்பந்த கால அளவான இரண்டு வருடத்தில், தானாக நின்று விட்டாலோ, அல்லது சரியான முறையில் பணிசெய்யாமல், அதன் காரணமாக ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு, வேறு ஒப்பந்ததாரர் மூலம் நடைபெற்றால், அதற்காக ஏற்படும் அதிகபடியான செலவை, ஒப்பந்ததாரர் செலுத்த வேண்டும்.

19. GST ரெஜிஸ்டர் செய்திருந்தால், தெரிவிக்க வேண்டும்.

20. எந்த சூழ்நிலையிலும் மேலாண் இயக்குநரின் முடிவே இறுதியானது.

(20 விதிமுறைகள்)

அனைத்து விதிமுறைகளையும் மனப்பூர்வமாக சம்மதிக்கின்றேன்.

ஒப்பந்ததாரரின் கையொப்பம்

விண்ணப்பிக்கும் பணிமனையின் பெயர் :

ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி :

தொலைபேசி / கைபேசி எண்கள் :

Wondershare PDFelement

Wondershare
PDFelement

# COMMERCIAL BID

| TENDER SCHEDULE- LABOUR CONTRACT FOR BUS GLASS FIXING WORK THIRUCHI FC UNIT | | | | | |
|---|---|---|---|---|---|
| LAST DATE AND TIME FOR RECEIPT OF FILLED TENDER FORM-12 .07.2022 @ 15.00 HRS | | | | | |
| SL. NO | DESCRIPTION OF WORK | UOM | NO OF BUSES | BASIC RATE PER NO | |
| | | | | IN FIGURES | IN WORDS |
| 01 | LABOUR CHARGES FOR AC VEHILCE FRONT GLASS FIXING- RATE PER NO | NO | 180 | | |
| 02 | LABOUR CHARGES FOR UD VEHILCE FRONT GLASS FIXING- RATE PER NO. | NO | 240 | | |
| 03 | LABOUR CHARGES FOR AC VEHILCE SIDE WINDOW GLASS FIXING- RATE PER NO. | NO | 600 | | |
| 04 | LABOUR CHARGES FOR UD VEHILCE SIDE WINDOW GLASS FIXING- RATE PER NO. | NO | 600 | | |
| 05 | LABOUR CHARGES FOR UD & NSS VEHILCE TOP FIXED GLASS FIXING. | NO | 360 | | |
| 06 | LABOUR CHARGES FOR ALL VEHILCE REAR WINDSCREEN GLASS FIXING- RATE PER NO. | NO | 240 | | |

Wondershare
PDFelement

| ***TERMS & CONDITIONS:*** | |
|---|---|
| GST IF APPLICABLE | |
| EMD PARTICULARS | |
| REMARKS | |

Address of the Tenderer with seal

Signature of the Tenderer

Wondershare PDFelement

# COMMERCIAL BID

| TENDER SCHEDULE- LABOUR CONTRACT FOR BUS GLASS FIXING WORK NAGERCOIL FC UNIT | | | | | |
|---|---|---|---|---|---|
| *LAST DATE AND TIME FOR RECEIPT OF FILLED TENDER FORM-12.07.2022 @ 15.00 HRS* | | | | | |
| SL. NO | DESCRIPTION OF WORK | UOM | NO OF BUSES | BASIC RATE PER NO | |
| | | | | IN FIGURES | IN WORDS |
| 01 | LABOUR CHARGES FOR AC VEHILCE FRONT GLASS FIXING- RATE PER NO. | NO | 60 | | |
| 02 | LABOUR CHARGES FOR UD VEHILCE FRONT GLASS FIXING- RATE PER NO. | NO | 60 | | |
| 03 | LABOUR CHARGES FOR AC VEHILCE SIDE WINDOW GLASS FIXING- RATE PER NO. | NO | 120 | | |
| 04 | LABOUR CHARGES FOR UD VEHILCE SIDE WINDOW GLASS FIXING- RATE PER NO. | NO | 240 | | |
| 05 | LABOUR CHARGES FOR UD & NSS VEHILCE TOP FIXED GLASS FIXING- RATE PER NO. | NO | 240 | | |
| 06 | LABOUR CHARGES FOR ALL VEHILCE REAR WINDSCREEN GLASS FIXING- RATE PER NO. | NO | 120 | | |

Wondershare PDFelement

| ***TERMS & CONDITIONS:*** | |
|---|---|
| GST IF APPLICABLE | |
| EMD PARTICULARS | |
| REMARKS | |

Address of the Tenderer with seal

Signature of the Tenderer

Wondershare
PDFelement

# COMMERCIAL BID

| TENDER SCHEDULE- LABOUR CONTRACT FOR BUS GLASS FIXING WORK MADURAI FC UNIT | | | | | |
|---|---|---|---|---|---|
| ***LAST DATE AND TIME FOR RECEIPT OF FILLED TENDER FORM-12.07.2022 @ 15.00 HRS*** | | | | | |
| SL. NO | DESCRIPTION OF WORK | UOM | NO OF BUSES | BASIC RATE PER NO | |
| | | | | IN FIGURES | IN WORDS |
| 01 | LABOUR CHARGES FOR UD VEHILCE SIDE WINDOW GLASS FIXING- RATE PER NO. | NO | 240 | | |

| ***TERMS & CONDITIONS:*** | |
|---|---|
| GST IF APPLICABLE | |
| EMD PARTICULARS | |
| REMARKS | |

Address of the Tenderer with seal

Signature of the Tenderer

Wondershare
PDFelement